
ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 6 இதழ் : 6 ஏப்ரல் 2010



**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.**

யோவான் 11:25

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

# ரன்சிங் பாபோர்

மத்தியப்பிரதேசம்

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் ரன்சிங் பாபோர் மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள கேடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எனது கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இயேசுகிறிஸ்துவை அறியாத முரடான ஜனங்கள். சாராயத்தைக் குடித்து சண்டையிடுவது இவர்களது பொழுது போக்கு. அசுத்த ஆவிகளை வணங்குகிற இவர்கள், வியாதி வந்தால் மந்திரவாதிகளை நாடிச் செல்வார்கள். இவர்களில் ஒருவனான நான் (ரன்சிங் பாபோர்) அசுத்த ஆவிகளின் பிடியில் சிக்கி அவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தேன். இதனால் எனது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பல்வேறு வியாதிகள் காணப்பட்டன. பல்வேறு மந்திர பூஜைளை ஏறெடுத்தும், மருத்துவம் பார்த்தும், எந்த பலனுமில்லை. இந்த வியாதியின் காரணமாக என்னுடைய இரண்டு சகோதரர்கள் மரித்துப்போனார்கள். எங்களை விடுவிப்பார் யாருமில்லையே என்று தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில், முண்டத் என்ற கிராமத்தைச் சேரந்த ஷாலோம் கிராம சபை விசுவாசி ஒருவர் மூலமாக இயேசுகிறிஸ்துவைக் கேள்விப்பட்டு அந்த கிராம சபைக்குச் சென்றேன். அங்கிருந்த ஷாலோம் சுதேச ஊழியர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து எனக்கு விளக்கமாகக் கூறி, எனக்காகவும் எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்த நேரத்தில் தேவன் என்னை அசுத்த ஆவிகளின் பிடியில் இருந்து விடுவித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

அன்றைய தினத்திலே இயேசுவை குடும்பமாக ஏற்றுக் கொண்டோம். தேவன் எங்கள் குடும்பத்திலுள்ள அனைத்து வியாதிகளையும் மாற்றிப்போட்டார். அதன்பின் தொடர்ந்து சபைக்கு வந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தேன். இயேசுகிறிஸ்துவின் அன்பு என்னை ஊழியம் செய்ய நெருக்கியது. நான் பெற்ற சமாதானத்தை என்னுடைய சொந்த ஜனங்களும் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் என்னுடைய வாழ்க்கையை ஊழியத்திற்கு அர்ப்பணித்தேன். தற்போது ஷாலோம் ஊழியத்தின் மூலம் குறுகிய கால வேதாகமப் பயிற்சி பெற்று என்னுடைய சொந்த கிராமமான கேடா கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும் என்னுடைய குடும்பம் மற்றும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Immanuel Ministries,** Chennai.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த மலர் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தேவகிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் கடந்த மார்ச் மாதம் முழுவதும் ஊழியங்களை சிறப்பாக நடத்த தேவன் கிருபை தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

03.03.10 அன்று மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் இணைந்து ஊழியத்தின் ஆசிர்வாதங்களுக்காகவும், அனைத்து பீல் மக்கள் இரட்சிக்கப்படவும், மற்றும் ஜெபித்து தாங்கும் அனைவரையும் தேவன் ஆசீர்வதிக்கவும் பாரத்துடன் ஜெபித்தார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடந்த இந்தக் கூடுகையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வெளிப்பட்டபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

தேவகிருபையால் 10,13,15,17 ஆகிய நாட்களில் சுதேச ஊழியர்கள் கூடுகையை நடத்தும்படியாக தேவன் கிருபை தந்தார். ஊழியர்கள் புது அபிஷேகத்துடன், புதிய தரிசனத்துடன் கடந்து சென்றார்கள்

மார்ச் 13,14,15 ஆகிய நாட்களில் டெல்லியில் உள்ள Mizoram Christian Fellowship மூலமாக Dr. Lal Chungliana தலைமையில் 6 பேர்கள் நம்முடைய பணித்தளத்திற்கு வந்து ஊழியங்களை நடத்தினார்கள். இந்தக் குழுவினர் "North, East India –வில் மிசோ ஆதிவாசி ஜனங்கள் எவ்வாறு 100% கர்த்தருக்குள் நடத்தப்பட்டார்கள் என்பதை விவரித்து கூறியபோது முழு பீல் மக்கள் 2020–க்குள் தேவனை அறிந்துகொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை" என்று சுதேச ஊழியர்கள் விசுவாசித்து அறிக்கை செய்தார்கள்.

மார்ச் 9–ம் தேதி இராஜஸ்தானில் உள்ள அனைத்து பணித்தளங்களையும் 11 பிரிவாக பிரித்து மத்தியபிரதேசத்தில் உள்ள ஷாலோம் மூத்த ஊழியர்கள் குடும்பமாக சென்று சிறப்பு கூட்டங்களை நடத்தினார்கள். பரிசுத்த ஆவியானவர் அனைத்து

ஊழியர்களையும் வல்லமையாக பயன்படுத்தினார். அநேக வியாதியஸ்தர்கள் தெய்வீக சுகத்தைப் பெற்றார்கள். பலர் அபிஷேகத்தையும், பலர் தரிசனங்களையும் பெற்றார்கள். மத்தியபிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் காணப்படும் எழுப்புதல், தங்கள் மாநிலமான இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் காணவேண்டும் என்ற வாஞ்சையுடன் ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்கள்.

**மேலும் ஏப்ரல் மாத ஊழியங்களுக்காக**
**கருத்தாக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.**

**01.04.10** பெரிய வியாழன் இரவு அன்று நடைபெறும் கர்த்தருடைய பந்தி விசேஷித்த ஆராதனைக்காக ஜெபியுங்கள்.

**02.04.10** பெரிய வெள்ளியன்று **520** சபைகளில் நடைபெற உள்ள ஆராதனைகள் மூலமாக தங்கள் தெய்வீக அன்பு வெளிப்பட ஜெபியுங்கள்.

**03.04.10** மூன்று மாநிலங்களிலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு நடைபெற உள்ள சிறப்பு ஞானஸ்நான ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள்.

**04.04.10** ஈஸ்டர் ஞாயிறு சிறப்பு ஆராதனைகள் **3** மாநிங்களிலும் தடையின்றி நடைபெறவும், உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை சபைகளில் வெளிப்பட ஜெபியுங்கள்.

**12.04.10** முதல் **15.04.10** வரை நடைபெற உள்ள சிறப்பு மருத்துவ முகாம்கள் ஆசீர்வதிக்கப்படவும், நடத்த உள்ள மருத்துவர்கள், குழுவினர்களுக்கு தேவன் தம்முடைய ஞானம் தந்து முகாம்கள் ஆசீர்வதிக்கப்படவும், கொடுக்கப்பட உள்ள மருந்துகள் ஆசீர்வதிக்கப்பட, தடைகள் நீங்கவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**17.04.10** முதல் **19.04.2010** வரை போதகர் Pas. Joshua Stephen, Chennai அவர்கள் பணித்தள வருகைக்காகவும், ஊழியங்களுக்காகவும், ஆலய பிரதிஷ்டைக்காகவும் ஜெபியுங்கள்.

**21.04.10** முதல் **23.04.10** வரை போதகர். ஆமோஸ் (A.G. சபை, மார்த்தாண்டம்) மற்றும் குழுவினர்கள் பணித்தள வருகை மற்றும் ஊழியங்களுக்காகவும், ஆலய பிரதிஷ்டை ஆராதனைக்காகவும் ஜெபியுங்கள்.

குறிப்பாக **19.04.10** முதல் **29.04.10** வரை நடைபெற உள்ள 5 CBC Teachers Training Programme Camp-களுக்காவும், **520** பேர்கள் சிறப்பாக பயிற்சியை பெற்றுக்கொள்ளவும், தேவைகள் ரூ.**2.5** இலட்சங்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்

இவ்வருடம் கட்டப்பட உள்ள **100** கிராம ஆலயங்களுக்காக, நிதி உதவிக்காக ஜெபியுங்கள். **20** இடங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

நம் பீல் விசுவாசிகள் தங்கள் பிள்ளைகளை அதிகமாய் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப ஆரம்பித்துவிட்டார்கள். தேர்வு எழுதியுள்ள பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து மேற்படிப்புக்கு செல்ல ஜெபியுங்கள்.

**07.03.10** ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை பகுதி ஷாலோம் பங்காளர் கூடுகை மற்றும் ஷாலோம் ஊழியத்தின் சென்னை கிளை அலுவலகம் ஜெபித்து ஆரம்பிக்கப்பட்டது. விவரங்களை உள்ளே எழுதியுள்ளேன். வாசித்து தேவனைத் துதியுங்கள்.

மேலும் ஊழியப்பாதையில் பல இலட்சங்கள் நிதி உதவி தேவைப்படுகிறது. ரூ.**500/–** மாதம் கொடுத்து தாங்கக் கூடிய ஆதரவாளர்கள் இன்னும் **800** பேர்கள் எழுப்பப்படவேண்டும். ஷாலோம் ஆதரவாளர்கள் மாதம் ஒரு குடும்பத்தை, ஒரு சபையை அறிமுகப்படுத்த மிக அன்புடன் கேட்கிறேன்.

தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் தாகோத் பணித்தள அலுவலகம் மற்றும் முன்னேற்றப்பணி, கல்விப்பணி திட்டங்கள் யாவும் சிறப்பாக செயல்படுத்தப்படும்படியாக ஜெபியுங்கள்.

உங்கள் யாவருக்காகவும் ஜெபித்து வருகிறேன். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# "உயிர்த்தெழுந்தார் இயேசு"

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**



மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். இவ்வுலகில் மனுக்குலத்தை இரட்சிக்க பிதாவாகிய தேவனுடைய திட்டப்படி அவருடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை அனுப்பினார். வேத வாக்கியங்களின்படி அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அல்லேலூயா!

இன்னும் உலகத்தில் திறக்கப்பட்ட, காலியாக்கப்பட்ட, ஒரே கல்லறை ஆண்டவராகிய இயேசுவினுடையது. அவர் இன்னும் ஜீவிக்கிறார். மட்டுமல்ல அவர் திரும்ப வரப்போகிறார். இயேசு சொன்னார் "மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென் ... மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். (வெளி. 1:18 ; 22:20) இதில் மூன்று காரியங்களை இயேசு நமக்கு அழகாக சொல்லியிருக்கிறார். (1) நான் மரித்தேன், (2) உயிரோடிருக்கிறேன், (3) சீக்கிரமாய் வருகிறேன் என்பவற்றை சற்று தியானிப்போம்.

***1. இயேசு நமக்காக மரித்தார் :*** ஆண்டவராகிய இயேசு இப்பூமியில் வந்து நமக்கு இரட்சிப்பையும், சமாதானத்தையும், ஆசீர்வாதங்களையும் தருவதற்காக அவர் சிலுவையில் மரித்தார். இயேசு சிலுவையில் நம் பாவங்களை சுமந்தார். (I யோவான் 3:5),(I பேதுரு 2:24)

நம் அக்கிரமங்களை சுமந்தார் (ஏசா 53 : 13)

நம் சாபங்களை சுமந்தார் (கலா. 3:13)

நம் நோய்களை சுமந்தார் (மத். 8:17)

நம் பெலவீனங்களை சுமந்தார் (மத். 8:17)

நம் துக்கங்களை சுமந்தார் (ஏசா. 53:4)

நம் பாடுகளை சுமந்தார் (ஏசா. 53:4)

இயேசுவின் சரீரம் முழுவதும் காயங்களும், இரத்தக் கசிவுமாக காணப்பட்டு பாடுகள் அனுபவித்தார். அவர் பட்ட காயங்களை 5 வகையாக காணலாம்.

1, கால்களிலும், கைகளிலும் தாக்கப்பட்டதினால் உண்டான
காயங்கள். (சங் 22:16)

2. வாரினால் அடிக்கப்பட்ட காயங்கள் (மத் 27:26)

3. கோலினால் அடிக்கப்பட்ட காயங்கள் (மத் 27:30)

4. முட்களினால் ஏற்பட்ட காயங்கள் (மத். 27:29)

5. ஆணிகளால் உண்டான காயங்கள் (யோவான் 19:18)

அவர் நமக்காக ஜீவனை ஈந்த அந்த சிலுவை காட்சியை நினைவுகூறுவோம். அவர் நம்மில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூறுவோம். இயேசுவின் இரத்தம் நம்மை கழுவி சுத்திகரிக்கட்டும்.

***2. இயேசு உயிரோடு எழுந்தார் :*** அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் (மத்தேயு 28:6). தம்மை நேசித்து வாரத்தின் முதல் நாள் காலையிலே அதிக இருட்டோடே வந்த மகதலேனா மரியாளுக்கு காட்சி கொடுத்தார். தங்கள் ஜீவனை குறித்து பயந்தவர்களாய் பூட்டிய வீட்டில் இருந்த சீஷர்களுக்கு இயேசுதாமே நடுவில் வந்து "உங்களுக்கு சமாதானம்" என்று சொல்லி அவர்கள் பயத்தை நீக்கி தம்மை வெளிப்படுத்தினார். விசுவாசமற்ற தோமாவிற்கு மறுபடியும் தம்மை வெளிப்படுத்தினார். சீமோன் பேதுரு தேவனுடைய ஊழியத்தை மறந்துவிட்டு உலக வேலைக்கு செல்லும் போது தம்மை வெளிப்படுத்தி அற்புதத்தைச் செய்து "என்னை நேசிக்கிறாயா"? என்று கூறி தம்மை வெளிப்படுத்தினார்.

**அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.** (அப். 1:3) இன்றும் இயேசு நமக்கு தந்த

வாக்குதத்தம் **"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். என்றார். ஆமென்"** (மத். 28:20) "என் நாமத்தில் நீங்கள் எதைக் கேட்டாலும் தருவேன்" என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். "இரண்டு பேர் அல்லது மூன்று பேர் என் (இயேசுவின்) நாமத்தில் கூடும்போது அங்கே அவர்கள் மத்தியில் இருக்கிறேன்" என்று வாக்கு பண்ணியுள்ளார். இன்றும் நம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், நம் வேலைகள், கையின் பிரயாசங்களிலும், நாம் செய்யும் ஊழியங்களிலும் அவர் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிக்கிற தேவனாக இருக்கிறார். இன்றும் இயேசு ஜீவிக்கிறார்.

மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கின்றேன் என்றார் – இயேசு...

***3. இயேசு சீக்கிரமாய் திரும்பி வருவார் :*** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்திருந்த கடைசி நாட்களில் தம் சீஷர்களுடன் உரையாடும்போது அவர் கூறினார் **"நான் இருக்கிற இடத்திலேயே நீங்களும் இருக்கும்படி", நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.** (யோவான் 14:3) இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்காக, நமக்காக ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படி சென்றிருக்கிறார். நிலையில்லாத இவ்வுலகத்தில் வாழும் நமக்கு கைகளால் கட்டப்படாத வாசஸ்தலத்தை உண்டுபண்ணி மறுபடியும் அவருடன் நம்மைச் சேர்த்துக் கொள்வார். இந்த பாக்கியம் யாருக்கு? தேவனுடைய பிள்ளைகளுக்கு **"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்".** (யோவான் 1:12) அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்குத்தான்.

இரண்டாவதாக அவர் நியாதிபதியாக திரும்ப வரப்போகிறார். உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயம்தீர்க்க இயேசு வரப்போகிறார். **"அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாய் இருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்."** (வெளி 22:11)

**“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது”.** (வெளி 22:12) முதல் வருகையால் கிருபையுள்ளவராக, விடுதலை தருபவராக, இரட்சிப்பவராக வந்தார். இரண்டாம் வருகையில் நியாதிபதியாக வரப்போகிறார். **“ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்”.** (வெளி 20:15) மட்டுமல்லாமல் கோபாக்கினைக்கு அவர் அளிக்கும் பலன்களுடன் அவர் வரப்போகிறார். கிறிஸ்துவுக்காக, கலிலேயர்களாக உழைத்தவர்கள், பாடுபட்டவர்கள், சாட்சியாக வாழ்ந்தவர்கள், தேவ ராஜியத்தை கட்டினவர்கள், ஆத்தும ஆதாயம் செய்தவர்கள் இப்படி பலருக்கு அளிக்கும் பலன்களுடன் திரும்பவருவார். மத்தேயு 25ம் அதிகாரத்தில் தாலந்தைக் குறித்த இயேசுவின் உவமையும் செம்மறி ஆடு, வெள்ளாடு உவமைகளிலும் அதைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

***நாமும் ஆயத்தமாவோம் :*** இயேசுவின் பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், அவருடைய வருகை இவைகளை தியானிக்கும் போது நாம் என்ன செய்யவேண்டும். முதலாவது இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பாவ மன்னிப்புக்கேற்ற ஞானஸ்நானம் பெற்று சபையில் அங்கமாய் இணைந்து அவருடைய பிள்ளைகளாய் வாழவேண்டும்.

அவருடைய பிள்ளைகளாய் வாழும் நமக்கு இயேசு கொடுத்த கட்டளை அன்றியும் மனம் திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசிங்கிக்கப்படவும் வேண்டியது.

நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

***பிரசங்கிக்க வேண்டும்:*** இயேசுகிறிஸ்துவின் பிரதானமான அன்பின் கட்டளை இது. சகல ஜாதிகளுக்கும்,பாஷைக்காரர்களுக்கும் தேசத்தார்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். நம்மை சுற்றியுள்ளவர்களுக்கும், தூர இடங்களில் இருக்கிறவர்களுக்கும் நற்செய்தி பணியாளர்களை அனுப்பி ஜெபித்து தாங்கவேண்டும்.

***சாட்சிகளாய் இருங்கள்:*** வரப்போகும் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் அவரைப் போல் பரிசுத்தராக, அன்பும் மனதுருக்கமுள்ளவர்களாக ஆவியின் கனிகளை கொடுக்கிறவர்களாக உழைக்க வேண்டும். இயேசு சொன்னார்.

நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.

நீங்கள் உலகத்திற்கு உப்பாயிருக்கிறீர்கள்.

நீங்கள் உலகத்திற்கு சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

***உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிசிக்கப்படுங்கள்:*** இரட்சகராகிய இயேசு நம்முடன் என்றென்றைக்கும் இருக்கும்படி வாக்குத்தத்தம்பண்ணின பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். **"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்".** (அப். 1:8)ன் படி "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். சாட்சியாய் வாழவும், ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவும், ஜெப ஆவியால், விண்ணப்பத்தின் ஆவியால் நிரப்பப்பட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் அனுதினமும் நிரப்பப்பட வாஞ்சிப்போம். ஆதி அப்போஸ்தலர் சபை சாதனைகளை போல் சாட்சிகளாய் அவர் வருகைக்கு ஆயத்தமாவோம். மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம். ஆமென்.

"கர்த்தராகிய இயேசுவே வாரும்!" ஆமென்.

# ஜெபக்குறிப்புகள்

**பீல் மக்கள்**

✞ பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Sharing Love Mission**

✞ ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்டுள்ள 435 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

✞ 2010–ம் வருடத்தின் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Diocese in India**

✞ ஷாலோம் பேராயத்திற்காகவும், 77 மூத்த ஊழியர்களுக்காகவும், அந்த சபைகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

✞ சபை மூப்பர்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Charity Mission**

✞ ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெறும் சமுதாய நலத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

✞ நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ நமது ஷாலோம் விடுதியில் படித்துவரும் ஆதிவாசி பிள்ளைகளுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

**அலுவலக ஊழியங்கள்**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகத்தில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

✞ அலுவலக ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

**ஊழியத் தேவைகள்**

✞ இந்த மார்ச் மாதத்திற்கான தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்படியாக ஜெபியுங்கள். மாதந்தோறும் ரூ.500/– கொடுக்கக்கூடிய 1000 கிராம ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**மருத்துவ முகாம்**

✞ நமது பணித்தளங்களில் ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள மருத்துவ முகாம் மற்றும் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்களுக்காகவும், மருத்துவர்கள் மற்றும் குழுவினரை தேவன் பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தள பார்வை**

✞ இந்த மாதம் சென்னையைச் சேர்ந்த ஜோசப் ஸ்டீபன் அவரக்ள் குழுவினரும், மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Pr. ஆமோஸ் அவர்கள் குழுவினரும் நமது பணித்தளங்களை பார்வையிட செல்கின்றனர். இவர்களுடன் தேவ பாதுகாவல் இருக்க ஜெபியுங்கள்.

# பணித்தள சாட்சிகள்

*தேவனுக்கே மகிமை....*

**சகோ. ஹவ்சிங் சங்காடா** **பரேவா (குஜராத்)**

லக்ஷ்மி பேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது, இதனால் விஷம் உடலில் ஏறி மயக்கமடைந்துவிட்டாள். நாங்கள் போய் இந்த சகோதரிக்காக விசுவாசத்துடன் ஜெபித்தோம், தேவன் எங்களது ஜெபத்தைக் கேட்டு விஷத்தை நீங்கி சுகத்தைக் தந்தார்.

**சகோ. தேர்சிங் வகீலா** **மன்கோசலா (குஜராத்)**

கபிலாபேன் என்ற சகோதரியின் கால்கள் பெலவீனமடைந்து மூன்று ஆண்டுகளாக நிற்கவும் முடியாமல், நடக்கவும் முடியாமல் அவதிபட்டார். மருத்துவமனைக்குச் சென்று 15,000க்கும் அதிகமாக பணம் செலவு செய்தும் பலனில்லாமல் போனது., அதன்பின் இயேசுகிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு விசுவாசத்துடன் சபைக்கு வந்தனர். இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் இந்த சகோதரியின் பெலவீனங்களை நீக்கி நல்ல சுகத்தைக் கட்டளையிட்டார்.

**சகோ. சாம்சன் டாமோர்** **வான்கோல் (குஜராத்)**

பிந்துபேன் டாமோர் என்ற சகோதரி குழந்தை உண்டாயிருந்தாள், மருத்தவ பரிசோதனைக்காக டாக்டரிடம் சென்றபோது டாக்டர் கர்ப்பப்பை மிகவும் பலவீனமாக உள்ளது ஆகவே மகப்பேறு பெறுவது மிகக்கடினம் எனக் கூறிவிட்டார். இந்த சகோதரி நமது சபையின் விசுவாசி ஆகவே விசுவாசத்துடன் இந்த சகோதரிக்காக அனைவரும் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டார்.

**சகோ. துபலியா மேடா** **நகர்புரா (மத்தியப்பிரதேசம்)**

ராகுல் என்ற சகோதரரை பாம்பு கடித்துவிட்டது. மந்திரவாதிகளிடம் கொண்டு சென்றார்கள் சரியாகவில்லை. இறுதியாக நமது சபைக்கு ஜெபிக்கும்படி கொண்டு வந்தனர். இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் பாம்பின் விஷத்தை முறியடித்து அந்த சகோதரரின் ஜீவனைக் காத்தார்.

**சகோ. ஜங்ளா டாமோர் காக்கன்வானி (மத்தியப்பிரதேசம்)**

கமலாபேன் என்ற சகோதரிக்கு நீண்ட நாட்களாக நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் எரிச்சல் இருந்து வந்தது, மேலும் அந்த சகோதரி இரத்த வாந்தி எடுப்பார்கள். பல மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்றாலும் குணமாகவில்லை. சபைக்குக் கொண்டு வந்தார்கள், இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் கூறி ஜெபித்தபோது தேவன் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. இந்தர்சிங் ஜமார் அந்தர்சும்பா (மத்தியப்பிரதேசம்)**

கண்டோஸ் பாய் என்ற சகோதரர் திடீரென பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார். ஆகையால் அவரால் எழுந்து நிற்கவும், நடக்கவும் முடியாது. என்னை ஜெபிக்கும்படி அழைத்தனர். இயேசுவின் நாமத்தைக் கூறி ஜெபித்தேன். தேவன் எனது ஜெபத்தைக் கேட்டு இந்த சகோதரரைத் தொட்டு பூரண சுகமாக்கினார். இப்போது இந்த சகோதரர் எழுந்து நடக்கவும் நிற்கவும் செய்கின்றார்.

**சகோ. வால்சிங் நினாமா சாக்வா (இராஜஸ்தான்)**

சோமாபேன் என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. இதனால் இந்த சகோதரி மிகவும் கஷ்டப்பட்டார். இந்த சகோதரிக்காக பாரத்துடன் ஜெபித்தோம், ஜெபத்தினை தேவன் கேட்டு அற்புதமான சுகத்தைக் கட்டளையிட்டார்.

**சகோ. துல்ஜி கராசியா கிண்டிபாடா (இராஜஸ்தான்)**

களியாபாய் என்ற சகோதரர் பிசாசின் பிடியில் சிக்கி மிவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இந்த சகோதருக்காக ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.


**சகோ. கமலேஷ் K. முனியா கிண்டிபாடா (இராஜஸ்தான்)**

லீலாபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. மிகவும் வேதனை அனுபவித்து வந்தார் இந்த சகோதரி. இந்த நேரத்தில் விசுவாசத்துடன் ஜெபித்தோம், தேவன் விஷத்தை நீக்கி ஜீவனைப் பாதுகாத்தார்.

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

---

**FORM IV**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Thoothukudi |
| 2. | Periodicity of it's Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | S. Joseph |
| 4. | Address | : | Rajan Press<br>59, Palayamkottai Road,<br>Thoothukudi - 628 002. |
| 5. | Whether the Citizen of India | : | Yes |
| 6. | Publisher's Name | : | V. Devadoss |
| 7. | Address | : | 5/168, Caldwell Colony,<br>3rd, Street,<br>Thoothukudi - 628 008. |
| 8. | Editor's Name | : | V. Devadoss |
| 9. | Address | : | As above |

I V. Devadoss, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 30.03.2010

sd

signature of Publisher

# CBC (Children Bible Class - 2010)

ஒவ்வொரு ஆண்டும் நமது பணித்தளங்களில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான CBC நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 2008ஆம் ஆண்டில் **“இயேசுவே இரட்சகர்”** என்ற தலைப்பில் நாம் நடத்திய CBC –ல் 17,000 சிறுவர்களும், 2009ஆம் ஆண்டில்**“விசுவாசமே ஜெயம்”** என்ற தலைப்பில் நாம் நடத்திய CBC –ல் சுமார் 20,000 சிறுவர்களும் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதம் **“நல்ல போதகர் இயேசு”** என்கிற தலைப்பில் 25,000 சிறுவர்களுக்கு –520 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

***இதற்கான தேவைகள்:–***

1. 520 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்
2. 25,000 CBC புத்தகங்கள்.
3. Badge.
4. பாட்டு புத்தகங்கள் (10,000)
5. கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets)

**CBC** புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 25,000 குழந்தைகளுக்கு ரூ. **2.5 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ***மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம் உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.***


தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




CBC பயிற்சி புத்தகங்கள்

**“மிகவும் சிறியவராகிய..... இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்”** *மத். 25:40*

# அலெக்ஸாண்டர் மெக்கே



மிஷனெரி முன்னோடிகள்

**அலெக்ஸாண்டர் மெக்கே** (Alexander Mackay) ஸ்காட்லாந்து தேசத்தில் 1849ம் வருடம் அக்டோபர் 13ம் தேதி பிறந்தார். சிறு வயதிலேயே தன்னை கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்ததுடன். நேர்மையாக வாழவும், கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்யவும் துடிப்புடனும் இருந்தார். இவரது வாழ்வைக் கவனித்த பெற்றோரும் தங்களது மகன் ஒரு போதகராகவோ மிஷனெரியாகவோ மாறுவான் என்ற நம்பிக்கையுடன் இருந்தனர். சபைப் போதகரான தனது தந்தையின் வேத போதனைகளும், அவரது தாய் சொல்லும் மிஷனெரி சரிதைகளான வில்லியம் கேரி, ஹென்றி மார்ட்டின், டேவிட் லிவிங்ஸ்டன் கதைகளையும் விரும்பிக் கேட்பார். இவர் தொழில் நுட்பத்தில் அதிக ஆர்வமுடையவர். தனது தகப்பனாரின் ஆலயக் கட்டுமானப் பணியின்போது, அங்குள்ள தொழிலாளர்களுடன் சேர்ந்து பணி புரிந்தார்.

பதிமூன்று வயதான அலெக்ஸாண்டர் கப்பல் கட்டும் தொழில்நுட்ப கல்வியைக் கற்றார். ஜெர்மனிக்கு மேற்படிப்பிற்காகச் சென்றார். டேவிட் லிவிங்ஸ்டன் என்ற மிஷனெரியின் வாழ்க்கைச் சரிதையைப் படித்துவிட்டு, தனது டைரியில், **“லிவிங்ஸ்டன் இறந்துவிட்டார்; ஆப்பிரிக்கா தேசத்தில் தேவனையும், தனது அயலானையும் நேசித்த ஸ்காட்லாந்து கிறிஸ்தவன். நீயும் போய் அப்படியே செய்”** என்று எழுதினார் அலெக்ஸாண்டர். 1875ஆம் ஆண்டு டிசம்பர் 12ம் தேதியில் டெய்லி ரெவியு என்ற பத்திரிக்கையில், டேவிட் லிவிங்ஸ்டனைத் தேடிப்போன ஹென்றி எம்.ஸ்டேன்லி (Henry M. Stanley) எழுதின கடிதம் அச்சாகியிருந்தது. உகாண்டாவின் ராஜா வெள்ளை மனிதர்களின் கடவுளை அறிய வாஞ்சை காட்டுகிறார். உகாண்டா மக்களின் நோய்களைக் குணமாக்கவும், அவர்களுக்கு வீடுகளைக் கட்டவும், எந்த வேலை செய்யவும் ஆயத்தமாக உள்ள மனிதர் கிடைப்பாரேயானால் அவர் ஆப்பிரிக்க தேசத்தை மீட்பராவார் என்று எழுதியிருந்தார். இதனைப் படித்ததும் பொறியியலாளரான நான் முன்னேற்றமில்லாத ஆப்பிரிக்கா போய் என்ன செய்வது? என்று பல கேள்விகளுடன் இருந்த ஆலெக்ஸாண்டருக்கு இது தெய்வீக அழைப்பாகவே இருந்தது. உடனே திருச்சபை மிஷனெரி சங்கத்திற்கு (CMS) கடிதம் எழுதி உகாண்டாவிற்கு (Uganda) என்னை அனுப்புவீர்களானால் மகிழ்ச்சியுடன் சென்று அங்கு தேவப்பணி செய்வேன் என்று தெரிவித்தார். எழு வாலிப மிஷனெரிகளுடன் 1876ஆம் ஆண்டு எப்ரல் 27ம் தேதி ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள உகாண்டாவிற்கு கப்பல் ஏறினார் அலெக்ஸாண்டார்.

சென்சிபர் (Zenzibar) என்ற இடத்தை அடைந்தவுடன் அலெக்ஸாண்டர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அங்கு சில காலங்கள் தங்கினார். சுகமடைந்ததும் தன்னுடைய பணியைத் தொடர ஆரம்பித்தார். தன்னுடன் எடுத்து வந்த உபகரணங்கள் மூலம் கடற்கரையிலிருந்து எம்பிவாப்பா (Mpwapwa) என்ற இடம் வரை 230 மைலுக்கான பாதையை பல கடினமான

சூழ்நிலையின் மத்தியில் அமைக்க ஆரம்பித்தார். அடர்ந்த காடு, மரங்கள், கொடிகள் சூழ்ந்த சிறு பூனைக்கூட நுழைந்து போக முடியாத ஒரு இருண்ட பகுதியில் இந்த சாலையை அமைத்தார். இந்த கடினமான சாலைப்பணியை ஒரு பெரிய தரிசனத்துடன் அமைத்தார் என்பதனை அவர் தனது தந்தைக்கு எழுதிய கடிதம் விளக்குகிறது. இது கிறிஸ்து ராஜாவின் பாதை, இதில் நடப்போர் ஒவ்வொருவரும் அவரை அறிந்து கொள்வார்கள். இருண்ட காட்டின் நடுவே பாதை அமைந்ததைப்போல, அவர்களது இருண்ட மூட நம்பிக்கைகளைத் தகர்த்து எறியப் பாடுபட்டார். தீய ஆவிகளுக்குப் பயந்ததால் மக்கள் தாயத்துக்களை எப்போதும் அணிந்து கொண்டும், வீட்டின் கதவுகளில் தொங்கவிட்டும் இருப்பார்கள். மந்திரம், சூனியம் போன்றவற்றை எதிர்த்து பிரசங்கித்ததுடன் செயல்முறை விளக்கமாக ஒரு தாயத்தை விலைகொடுத்து வாங்கி மக்கள் முன்பாக அதை எரித்துக் காண்பித்தார். மிஷனெரிக்கு என்ன சம்பவிக்கும்? என்று மக்கள் ஆச்சரியத்துடன் கவனித்தனர். ஒன்றும் நடக்காததை கவனித்த மக்கள் அலெக்ஸை நம்ப ஆரம்பித்தனர். உகாண்டா ராஜாவின் தாய் மரித்தபோது, சவப்பெட்டியைச் செய்ய அலெக்ஸாண்டரிடம் கேட்டனர். ராஜா விரும்பியப்படி அதை திறம்பட வடிவமைத்ததால் ராஜா அவரைப் பாராட்டினார். அதைப் பயன்படுத்தி ராஜாவிடம் மரணத்திற்குப் பின் ஒரு நித்திய வாழ்வு உண்டு என்பதைத் தைரியமாகப் பகிர்ந்து கொண்டார் அலெக்ஸாண்டர். ராஜாவுடன் ஒரு நல்ல உறவையும் சம்பாதித்தார்.

உகாண்டா மக்கள் அங்குள்ள மாசுபட்ட தண்ணீரால் நோய்க்கிருமிகள் தாக்கி பல்வேறு நோய்களால் அவதிப்படுவதைப் பார்த்து, கிணறு வெட்ட ஆரம்பித்தார். கிணறு வெட்டுவது, தொழிற்கூடம் அமைப்பது, பள்ளிக்கூடம் நடத்துவது, பாதை அமைப்பது என்ற பல பணிகளை அலெக்ஸாண்டர் செய்தார். தன்னுடன் எடுத்துவந்த அச்சு இயந்திரம் மூலம் எழுத்து உருவங்களைப் பெரியதாக அச்சிட்டு மக்களுக்கு எழுதப்படிக்க சொல்லிக் கொடுத்தார். தனது மீதியான நேரத்தை புதிய ஏற்பாட்டு பகுதிகளை அவர்களது மொழியில் மொழிபெயர்ப்பும் செய்தார். உகாண்டா பகுதியில் ஒரு தொழிற்கூடம் அமைத்து இரும்பை உருக்கவும், பல இரும்புச் சமான்களைச் செய்யவும் கற்றுக் கொடுத்தார். நெருப்புப் பிழம்பாக எரியும் இரும்புக் கம்பியை வேண்டிய வளைவுகளில் வளைத்து, தண்ணீர்போட்டு குளிரவைத்து அவர் செய்யும் முறையைப் பார்த்து இவரும் “ஒரு வெள்ளைக்கார மந்திரவாதி” என்று மக்கள் வியந்தனர். இவரை “வேலை செய்யும் வெள்ளை மனிதன்” என்று அழைத்தனர். ஏனெனில் இவர்களது கலாச்சாரத்தில் பெண்கள் வேலை செய்ய பிறந்துள்ளனர் என்றும் ஆண்கள் ராஜாக்களுடன் பேசிக்கொண்டிருக்கவும், போரிடவும் சாப்பிடவுமே பிறந்துள்ளதாகவும் கருதினார்கள். இயேசு கிறிஸ்துவும் இவ்வுலகில் இருந்தபோது தச்சனாகப் பணிபுரிந்ததை விளக்கி வேலை செய்வது இழிவானது அல்ல என்று உணர்த்தினார். அலெக்ஸாண்டர்.


பல பணிகளை அலெக்ஸாண்டர் செய்தபோதும் தனது இலக்கான ஆத்தும ஆதாயப்பணியை மறக்கவில்லை. ஆத்துமாக்களுக்காக பற்றி எரியும் வைராக்கியத்தை எனக்குத் தாரும். அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கும், இரட்சிக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே ஒரு இணைப்பாக இங்கு நான் நின்று கொண்டிருக்கிறேன். என ஜெபிப்பார். எந்த வழி முறைகளிலாவது, சுவிசேஷம் இந்த இருண்ட கண்டத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைய பாதையை செவ்வை பண்ணுவேன் என்பார். இவரது அர்ப்பணிப்பை ஆண்டவர் கனம்பண்ணி,

செம்பொர (Sembera) என்பவரை முதல் விசுவாசியாகத் தந்தார். இவரது ஞானஸ்நானத்திற்குப் பிறகு, ராஜாவின் மூன்று ஆட்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். அநேக ஆத்துமாக்கள் மந்தையில் சேர ஆரம்பித்தனர். ராஜாவும் சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டு ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக இருந்தார். ஆனால் பலதார மணம் (அநேக திருமணம் செய்வது), சூன்யம் செய்தல் அடிமைத் தொழில் மற்ற ஆதிவாசிகளைக் கொள்ளையிடுதல், விக்கிரக ஆராதனை போன்றவற்றை முழுமையாகக் கைவிட்டாலொழிய தான் ஞானஸ்நானம் கொடுக்க இயலாது என்று அலெக்ஸாண்டர் சொன்னபோது ராஜா அதை ஏற்க மறுத்தார். படையெடுப்புகளும், ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்வதும், அடிக்கடி நடக்கும் நிகழச்சிகளாக இருந்தன. ராஜாவின் சுகவீனத்தின்போது, மந்திரவாதிகளின் வார்த்தையின்படி, இரண்டாயிரம் எழை விவசாயிகள் கொல்லப்பட்டனர். தன்னுடைய உயிரையும் பணயம் வைத்து அலெக்ஸாண்டர் ராஜாவுக்குக் கடிதம் எழுதி இப்படி உயிர்களைக் கொல்வதை விட்டுவிடக் கெஞ்சினார். சிறிது நாட்களில் ராஜா மேடசா (Mtesa) இறந்து போனார். அவருக்குப்பின் வந்த ராஜா மேவான்கா (Mwanga), அதிகக் கொடூரமானவன். கிறிஸ்துவைப் பின்பற்றி வந்த மக்களைக் கொடூரமாகக் கொலை செய்ய ஆரம்பித்தான். மூன்று கிறிஸ்தவ வாலிபர்களின் கரங்களை வெட்டித் தீயிலிட்டுக் கொலை செய்தான். பிஷப் ஹனிஸ்டன் (Bishop Haniston) என்பவர் உகாண்டா வந்தபோது அவரை அம்பு எய்து கொல்ல கட்டளையிட்டான். 200 கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கைகளை வெட்டி மிதமான தீயில் வறுத்து சுட்டு எரித்தான் இந்த ராஜா. அநேகக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். மீதியாய் இருந்தவர்கள் சிதறப்பட்டுப் போனார்கள். இவரது உயிருக்கும் ஆபத்து இருந்தது. அதிகம் சோர்வுற்ற அலெக்ஸாண்டர் பவுலைப்போல நாங்கள் எப்பக்கமும் நெருக்கப்பட்டும் சோர்வடைவதில்லை என்ற வாக்குக்கேற்ப தன்னை தேவனுக்குள் திடப்படுத்திக்கொண்டு ஊழியத்தைத் தொடர்ந்தார். உகாண்டா தேசத்துக்கு மிஷனெரி தேவை என்று கடிதம் எழுதிய ஹென்றி ஸ்டான்லி, அலெக்ஸாண்டர் பணி செய்த இடத்திற்கே வந்தது அவரை இன்னும் உற்சாகப்படுத்தியது.


1890ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8ம் தேதி ஆப்பிரிக்க தேசத்தின் கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு தனது 41வது வயதில் உகாண்டாவில் அலெக்ஸாண்டர் மரித்தார். 14 வருடம் அப்பிரிக்கா தேசத்திலே பணிபுரிந்த அலெக்ஸ் ஒரு முறைகூட தனது சொந்த நாடு திரும்பவில்லை. 41 வயதான இளம் பொறியாளர் உகண்டா பகுதிக்காக உயிரையே கொடுத்ததால் ஏதாவது பயன் உண்டா? என்ற கேள்விக்கு 1922ம் வருடத்தில் பசில் மத்தேயு (Basil Matthews) என்பவர் இப்படியாக எழுதுகிறார். "இன்று உகாண்டாவின் பிரதம மந்திரி அப்போலோ காக்குவா (Appolo Kagwa) ஒரு கிறிஸ்தவர். இவர் சிறு பையனாக இருந்தபோது ராஜா மேவான்காவினால் அடித்து உபத்திரப்படுத்தப்பட்டவர். இன்று உகாண்டாவின் ராஜா கௌடியும் (Koudi) ஒரு கிறிஸ்தவர். தலைநகரில் ஒரு அழகிய தேவாலயம் உண்டு. இங்கு 70,000 உகாண்டா கிறிஸ்தவர்களும் உண்டு என்றார். அடிமை வியாபாரம் முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. ராஜாவுக்காக, விக்கிரத்திற்காக மனிதர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய மாறுதலை அலெக்ஸாண்டர் தன் சொந்த கண்களால் பார்க்கவில்லை என்றாலும் அவர் செலுத்தின விலைக்கிரயம் வீணாகவில்லை.

## T¦jR[j§tÏ AYNWUôLj úRûYITÓm ETLWQeLs


- ❖ கூட்டங்கள் முகாம்கள் நடத்துவதற்கு ஆம்பிளிபயர், ஸ்பீக்கர், மைக், மிக்சர் (ரூ.1 லட்சம் மதிப்பில்)


- ❖ பணித்தள காரியங்களை வீடியோ எடுக்க, மற்றும் செய்திகளை வீடியோ எடுத்து கிராமங்களில் உள்ள நம்முடைய விசுவாசிகளுக்கு அனுப்ப நல்ல ஒரு வீடியோ கேமரா (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



- ❖ ஆடியோ ரெக்கார்டிங் ரூம் அமைக்கப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)
- ❖ ஆடியோ ரெக்கார்டிங் –ற்கான உபகரணங்கள் – பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், மற்றும் செய்திகள் 1000 கிராம சபைகளுக்கு அனுப்பபட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



- ❖ 10 முக்கிய ஊழிய பொறுப்பாளர்களுக்கு 10 மோட்டார் சைக்கிள் தேவை (ரூ. 35,000 x 10)



- ❖ Training Unit & Communication Department க்கு 3 கம்ப்யூட்டர் தேவை (ரூ. 30,000 x 3)



- ❖ ஆராதனைகள் சிறப்பாக நடத்துவதற்கு Drum Set (ரூ.50,000) மற்றும் Pad (ரூ.30,000) தேவை



- ❖ மூன்று மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் கூட்டங்களை நடத்துவதற்கு நல்ல 3 ஜெனரேட்டர்கள் தேவை. (ரூ. 40,000 x 3)



***தேவைகளுக்காக ஜெபியுங்கள் கர்த்தர் உங்கள் உள்ளங்களில் பேசினால் மேற்கண்டவற்றில் ஏதாவது வாங்க காணிக்கையாகவோ அல்லது மேற்கண்ட உபகரணங்களாகவோ வாங்கிக் கொடுக்கலாம். கர்த்தர்தாமே உங்கள் குடும்பத்தை, ஊழியங்களை, தொழிலை ஆசீர்வதிப்பாராக...***



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- ✷ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ✷ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ✷ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ✷ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ✷ வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

AXIS BANK

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

ICICI Bank

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்




*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **“அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்”** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web adress : http://www.shalommission.in/magazineview.asp**


## Be¡X Tj§¬dûL **(English Magazine)**

பிரியமானவர்களே,




நீங்கள் அன்புடன் நேசித்து வரும் **“அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்”** பத்திரிக்கை தற்போது ஆங்கிலத்திலும் வெளிவருகின்றது. இதை **“Sharing Love Mission News Letter”** என்ற பெயரில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடுகின்றோம். உங்களுக்கு இந்த ஆங்கில பத்திரிக்கை தேவையெனில் எங்களுடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்த அன்புடன் கேட்கிறோம். அதன்பின் நாங்கள் உங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இந்த இதழை உங்கள் முகவரிக்கு அனுப்புகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காக அனுப்பப்படுகிறது.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2010) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–     ஆயுள் சந்தா : ரூ.600/–**

கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு பள்ளிகளில் 64 ஆயிரத்து 96 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். 341 தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. வரும் கல்வியாணண்டில் 200 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளமாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும்.

கடந்த ஆண்டு ஒரு லட்சத்து ஓராயிரம் மாணவர்கள் அமெரிக்காவில் பல்வேறு படிப்புகள் சேர்ந்துள்ளதாக சென்னை அமெரிக்க தூதரக அதிகார சென்னையில் அமெரிகக் இந்திய அறக்கட்டளை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமெரிக்காவில் உயர் படிப்பு மற்றும் மாணவர் விசா தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கிளல் மாணர்வளைச் சந்தித்து அவர் பேசினார். அப்பொது அவர் பேசுகையில் சீனா, ஐரோப்பா மற்றும் கனடாவிலிருந்து வரும் மாணவர்களைவிட வட இந்தியாவிலிருந்து அமெரிக்கா வரும் மாணர்வள் எண்ணிக்கை அதிகம்.

பெப்ஸி மற்றும் கொக்க கோலா நிறுவனங்கள் இனி தங்களின் அதிக கலோரி கொண்ட குளிர்பானங்களை பள்ளிகளில் விற்கப் போவதில்லை என அறிவித்துள்ளன. 2010 முதல் இந்த சுய தடையை அமல்படுத்தப்போவதாக பெப்ஸி மற்றும் கொக்க கோலா நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

பொள்ளாச்சி ரயில்வே ஸ்டேஷனில் உள்ள 148 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கிரேன் திருச்சி மியூசியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. சரக்கு ரயில்களில் வரும் கனமான பொருட்களை இறக்குவதற்காக, மனித சக்கி மூலம் இயக்கப்படு:ம் இந்த கிரேன் 1683ம் ஆண்டு தயார் செய்யப்பட்டது.

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்
**Sharing Love Mission**
168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்
Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

கிராம ஆலயம் முனியகுட்டா ராஜஸ்தான்



இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் மிகவும் உள்ளடங்கிய கிராமமாகும் முனிய குட்டா. இந்த கிராமத்தைச் சேர்ந்த வஜ்ஹிங் முனியா அசுத்த ஆவிகளை வணங்கி மந்திரபூஜைகள் செய்து வந்ததினால் தீய சக்திகளுக்கு அடிமைப்பட்டு காணப்பட்டார். இதன் மூலமாய் குடும்பத்தில் தீராத வியாதிகள், தொல்லைகள் காணப்பட்டன. இவருடைய மனைவிக்கு வயிற்றில் பெரிய கட்டி ஏற்பட்டு அதிக வேதனைப் பட்டார். பல்வேறு மந்திரவாதிகளிடம் கொண்டு சென்று ரூ. 20,000/— வரை செலவு செய்து பூஜைகள் செய்தும் எந்தவிதப் பலனும் இல்லை. மருத்துவரிடம் சென்றபோது அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் கோப்க்கா கிராமத்தைச் சேர்ந்த ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. பாதர் இயேசுவைப் பற்றிக் கூறி இயேசுவை ஏற்றுக் கொண்டால் சுகம் கிடைக்கும் என்று கூறினார். அவரது அழைப்பின் பேரில் கோப்க்காவில் நடைபெறும் ஞாயிறு ஆராதனையில் தன்னுடைய மனைவியோடு கலந்து கொண்டு ஜெபித்தார். ஜெப வேளையில் தேவனுடைய வல்லமை இறங்கி அற்புத சுகம் கிடைத்தது. இந்த அற்புதத்தின் மூலம் சகோ. வஜ்ஹிங் முனியா குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து வேதம் வாசித்து விசுவாசத்தில் வளர்ந்தபொழுது தேவன் அவரை ஆவியினால் அபிஷேகித்தார்.

பின்பு தனது வாழ்க்கையை இயேசுவுக்கு அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இவர் மூலமாய் 22 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளன. தேவனை ஆராதிக்க ஒரு ஆலயம் அவசியமாகவே தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்கென கொடுத்தார். அந்த இடத்தில் ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Dr. S. சுரேஷ் J. பால் அவர்களின் குடும்பத்தின் மூலமாக அளிக்கப்பட்ட நிதி உதவியில் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 60 ஆயிரம் மதிப்பில் ஆலயங்கள் கட்டுவதற்கு நிதி உதவி கொடுக்க முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **விஜய் கணாவா** |
| தகப்பனார் பெயர் | : | வில்லியம் கணாவா |
| தாயார் பெயர் | : | காந்திபேன் |
| பிறந்த நாள் | : | 17.04.1990 |
| படிக்கும் வகுப்பு | : | B.A., IInd yr. |
| சொந்த ஊரின் பெயர் | : | ஹிரோலா |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

விஜய் கணவாவின் தந்தை வில்லியம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர், ஆனாலும் இவர் உலகப் பிரகாரமாக வாழ்ந்து அனைத்துவிதமான பாவங்களையும் செய்து வந்தார். இவருடைய மனைவி பில்லிசூனியக் கட்டினால் பாதிக்கப்பட்டு மிகவும் வேதனைப்பட்டாள். வியாதிகளினால் முழுக் குடும்பமும் பாதிக்கப்பட்டிருந்தது. அநேக மந்திர கிரியைகள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இறுதியாக தமிழ்நாட்டிலிருந்து புதிதாக ஊழியர் ஒருவர் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு ஜாலோத்திற்கு வந்து சகோ. தேவதாஸ் அவர்களிடம் ஜெபித்தோம். அப்பொழுது தேவன் பிசாசின் சகல கட்டுகளிலிருந்தும் அற்புதமான விடுதலையைக் கொடுத்தார். இதன் மூலம் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்தார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** ஜெபம், பாடல் பாடுவது, விளையாட்டு ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் உண்டு. படித்து முடித்தபின்பு ஆசிரியராக வேண்டும் என்ற விருப்பம் உண்டு.

**ஜெபியுங்கள்:-** இவன் நன்றாக படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், பெற்றோர் செய்கின்ற வேலைகளை தேவன் ஆசீர்வதிக்கவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Mr. Augustine,** Chennai.

நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss